திரு. ஆற்காடு நா. வீராசாமி: அரசாங்கம் ' சார்ஜ் ஷீட் ' போடுவதாக இல்லை என்று சொன்னால், அந்த வழக்கை அரசாங்கம் திரும்பப் பெற்றிருக்க வேண்டும். அப்படித் திரும்பப் பெறவில்லை. அந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, 'சார்ஜ் ஷீட்' போடுவதா வேண்டாமா என்பதைப்பற்றி அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஆகவேதான் சொல்கிறேன். வழக்குப் போடுவதாக இருந்தால், வழக்குப் போடப்படும். ' விதட்ரா' செய்யப்படுவதாக இருந்தால், விசாரித்து செய்யப்படும். அதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவெடுக்கப்பட்டுள்ளது:—

23—3—1981	1. 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்.
	2. 1980-81 ஆம் ஆண்டு இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல்.
24—3—1981	1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்.
25—3—1981	1. 1980-81 ஆம் ஆண்டு இறுதி துணை விவர அறிக்கையின் மீது விவாதம்.
	2. 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்.
26—3—1981 & 27—3—1981	நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்.

28—3—1981 1. நிதி ஒதுக்க சட்ட முன்வடிவினை ஆய்வு செய்தல்.
2. நிதி ஒதுக்க (முன்பணச் செலவிற்கான) சட்ட முன்வடிவினை ஆய்வு செய்தல்.
3. நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்.

29—3—1981 ஞாயிறு—விடுமுறை.

30—3—1981 நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்.

31—3—1981 நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மேலவை காலை 9.30 மணி முதல் 12-30 மணி வரை தினமும் நடைபெறும்.

3. 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான என்னுடைய உரை முழுவதும் மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த உரையினுடைய முக்கியத்துவத்தை அவர்கள் உணர்வார்கள். என்றாலும் இதிலேயுள்ள முக்கியமான பகுதியை மட்டும் சுட்டிக் காட்டி விட்டு செல்லலாம் என்று கருதுகிறேன். உரையைப் படித்து முழுவதையும் உணர்ந்து கொள்கின்ற வாய்ப்பு அங்கத்தினர்களுக்கு இருக்கிறது. நான் படிக்காமல் விட்டால் இந்த அவையை நான் பொருட்படுத்தாமல் விட்டேன் என்ற குறை வரும். ஆகவே ஒரு சில முக்கியமான பகுதிகளை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும் என்று விரும்புகிறேன்.

"பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்(கு) இவ்வைந்து"

என்பது பொய்யாமொழிப் புலவர் வள்ளுவப் பெருந்தகையாரின் பொன் மொழி. நோயில்லாதிருத்தல், செல்வச் செழிப்பு, விளைபொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு என்று கூறுவார்கள் என்பதுதான், வள்ளுவப் பெருமான் உணர்த்தும் கருத்தாகும். அப்படிப்பட்ட அழகு, தமிழ்நாட்டிற்கு என்றும் தொடர்ந்து நின்று நிலவ வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஆட்சி புரிந்து வரும் தமிழக அரசின் சார்பாக, 1980-81 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1981-82 ஆம் ஆண்டிறகான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளையும்@ இம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

@ 58-91 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.